**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**S.C. No.178 / 2024**

Deposition of witness for PW3

Name : கச்சம்மாள்

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2026.

---

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:-

நான் தற்போது அரசமரத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 21.08.2015ம் தேதி ஆனந்தன் மகள் மருதாயிக்கும், வேலுச்சாமிக்கும் குரண்டியில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து அரசுமரத்துப்பட்டியில் உள்ள ஆனந்தன் வீட்டிற்கு மாலை சுமார் 6.30 மணிக்கு வந்தபோது அவர் வீட்டின் வராண்டாவில் இருந்த குடத்திலிருந்து தண்ணீரை நானும், எனது மகள் மதுமதி மற்றும் கனிகா, எங்கள் ஊரை சேர்ந்த பாண்டியம்மாள், கோமதி, வீரபுனிதா, வீரகுணா, அழகுபொன்னு, ஆனந்தாயி, தமிழ்செல்வி, ஒச்சம்மாள் ஆகியோர்கள் தண்ணீரை குடித்தவுடன் தொண்டை கரகரப்பாக இருந்தது. நாங்கள் பதறிபோய் அந்த குடத்தை பார்த்தபோது டப்பாவில் காம்ளக்ஸ் போன்ற ஒரு மருந்து கலக்கப்பட்டு இருந்தது. உடனே எங்களை சோழவந்தான் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்னர் மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், ஆனந்தன் வீட்டிற்கு ஜெகநாதன் அடிக்கடி போய்க்கொண்டிருந்ததால் ஆனந்தன் மகள் மருதாயிக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டு கண்டித்தார்கள். இதனால் ஜெகநாதன் ஆனந்தன் குடும்பத்தை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தண்ணீரிலும், உணவு பொருட்களிலும் மருந்து

கலந்துள்ளார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி.இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.19 06:14:47 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.